1992 மார்ச் 9]

இறந்த ஒரு மாத காலத்திற்குள் பணி வழங்கி அவர்களுடைய குடும்பங்களுடைய கண்ணீரைத் துடைக்க ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இறையுள்ளம் கொண்ட முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில், இறந்த குடும்பங்களுடைய வாரிசுதாரர்களுக்கு விரைந்து வேலை வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 127. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

127—

நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை.

*2232 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நூல் விலையைக் கட்டுப் படுத்தும் பொருட்டு பஞ்சு மற்றும் சிட்ட நூல் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதென மத்திய அரசினை தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதியை மத்திய அரசு தற்போது தடை செய்துள்ளது. மற்றும் மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் 50 விழுக்காடு அளவிற்கு சிட்ட நூல் உற்பத்தி செய்தல் வேண்டும் என்றும் மற்றும் சிட்ட நூல் விநியோகஸ்தர்கள் விலைப் பட்டியல், பதுக்கலைத் தடுத்தல் போன்றவற்றின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது அல்லாமல் மனிதாபிமானம் படைத்த தாயுள்ளத்தின் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தனியார் துறையின்கீழ் உள்ள கைத்தறி

நெசவாளர் சங்கங்களுக்கு 2,000 பேல்கள் சிட்ட நூல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும் விலையில் கைத்தறி இயக்குநரால் விநியோகிக்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாயிடங்களிலும் நூல் தாராளமாக கிடைக்கின்றன. ஆனால் விலைதான் ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே, அந்த விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு நெசவாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் நூல் பாங்க் அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான குறிப்புகள் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்விப் போட்டால் அதற்கான விளக்கத்தைத் தர முடியும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விலை அதிகமாக ஏறும்போது அந்த நூலை வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏதாவது விசேஷ சலுகையை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பஞ்சினுடைய விலை 50 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. இப்போது கோ–ஆப்டெக்ஸ் வாயிலாக 5 முதல் 8 சதவீதம் வரையிலும் தள்ளுபடி விலையை கூட்டுறவுத் துறைக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டெக்ஸ்டைலினுடைய வேலைநிறுத்தம் காரணமாக ஏராளமான நூல் முடங்கியிருக்கிறது. பஞ்சின் மார்க்கெட் விலை குறைக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலையிலும் திட்டமிட்டு நூல் விலையை குறைக்காமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறிந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக புகார்கள் வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 128: திரு. நா. சா. பழனிசாமி; டாக்டர் எம். கருப்புசாமி; திரு. மெ. ஆண்டி அம்பலம்; டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

128—

பாண்டியாறு புன்னம்புழா திட்டம்.

*3951. திரு. நா. சா. பழனிசாமி:
டாக்டர் எம். கருப்புசாமி:
திரு. எம். ஆண்டி அம்பலம்:
டாக்டர் மு. சீனியம்மாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் நிறைவேற்றவேண்டிய தக்க முயற்சிகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொண்டு இருப்பதை அறிந்து அதை மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தத் திட்டத்தை கடந்த 20, 30 ஆண்டு காலமாக பல்லடம், அவினாசிப் பகுதிகளில் தேர்தல்கள் நடைபெறுகின்ற காலத்தில் எல்லாம் அந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற வாக்குறுதியை அங்கே போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அனைவருமே சொல்லிக்கொண்டு இருக்கிற பிரச்சினையாக இருக்கிறது. அந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தால் நிரந்தரமாக வறட்சியாக இருக்கின்ற கோவை மாவட்டத்தினுடைய அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது. அது நீலகிரி மாவட்டம் கூடலூருக்கு அருகில் தேவாளை